சிம்மாசனம்



தலைவர் கலைஞர்


தமிழ்மொழி அகாதமி நடத்தும்
ஈடில்லாத் தமிழ்மொழியைச்
செம்மொழியாக்கிய இலக்கியக்கடல்
டாக்டர் கலைஞர்
அவர்களுக்கு

சுயமரியாதை

தலைவர் கலைஞர்

பேராசிரியர். தி.வ. மெய்கண்டார் அவர்களின்

அன்பளிப்பு

தலைமைக் கழக வெளியீடு:

திராவிட முன்னேற்றக் கழகம்

"அண்ணா அறிவாலயம்"

367 - 369, அண்ணா சாலை,

சென்னை - 600 018.

முதற்பதிப்பு : அக்டோபர் 2004

விலை : ரூ. 5/=

அச்சிட்டோர் : சில்வர் ஸ்ட்ரீக்,
174, பீட்டர்ஸ் சாலை,
சென்னை - 600 014.



மதுரையில்
முத்தமிழ்ச் சங்கத்தின் சார்பில்
நடைபெற்ற பாராட்டு விழாவில்
தலைவர் கலைஞர் ஏற்புரை

மதுரையில் நடைபெறுகின்ற இந்த மகத்தான பாராட்டு விழாவில் கலந்து கொண்டு உங்களையெல்லாம் சந்திப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். நான் விளிக்கும் பொழுது, "வணிகப் பெருமக்களே'' என்று சேர்த்து விளித்தேன். காரணம்; இன்று காலையில் வரும் வழியில் ஒரு பத்திரிகையைப் பார்த்தேன். ஒரு தமிழக அமைச்சர் என்னை பாராட்டி சொல்லி இருக்கிறார். "கருணாநிதி தமிழ் வியாபாரி'' என்று. அதை நான் பாராட்டாகத்தான் எடுத்துக் கொள்வேன். தமிழ் வியாபாரி என்றால் வியாபாரம் செய்கின்ற பொருள் என்னிடத்திலே இருக்கிறது என்று அதற்குப் பொருள். (கைதட்டல்) தமிழை நான் வியாபாரம் செய்கிறேன் என்றால், இருக்கிறது, வியாபாரம் செய்கிறேன். (பலத்த கைதட்டல்) இல்லாதவர்கள் வந்து பெற்றுக் கொள்ளலாம். எனவே, அப்படி இருக்கிற பொருளை பெற்றுக் கொள்வதற்காக, மொத்தமாக வாங்கி சில்லறையாக விற்பதற்குக்கூட வணிகப் பெருமக்கள் இங்கே வந்திருக்கலாம் என்ற அந்த எண்ணத்திலேதான், "வணிகப் பெருமக்களே'' என்று விளிக்கும்போது குறிப்பிட்டேன்.

இன்று இந்த விழா மதுரை மாநகரத்தில் மேடையிலே இருக்கின்ற சான்றோர்கள் எல்லாம் பாராட்டுகின்ற அளவிற்கு, போற்றுகின்ற அளவிற்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்றால், இதற்கு மூல காரணமாக விளங்குகின்றவர்கள்



தம்பி கவிப்பேரரசு வைரமுத்து அவர்களும், பெருங்கவிக்கோ சேதுராமன் அவர்களும், நம்முடைய மரியாதைக்குரிய தவத்திருகுன்றக்குடி அடிகளார் அவர்களும், தமிழ் ஆர்வலர் மணிமொழியன் அவர்களும், இவர்கள் ஆலோசனைகளை பெறுவதற்கு உதவிய அருமை நண்பர் வீராசாமி அவர்களும், மதுரை வேலுச்சாமி அவர்களும், பெருமக்கள் சார்பாக உதவிய பி.டி.ஆர். போன்றவர்களும் இந்த வெற்றிக்கு, இந்த விழாவின் பெருமைக்கு, சிறப்புக்கு காரணமாக அமைகிறார்கள் என்பதை எண்ணும் பொழுது, நான் அவர்களுக்கெல்லாம் முதலிலேயே நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஒவ்வொரு நாளும் தம்பி வைரமுத்து அவர்கள் வடுகப்பட்டியிலே தங்கிக் கொண்டு, மதுரைக்கும் வந்து, நடைபெறுகிற காரியங்கள் எவ்வளவு வேகமாக நடைபெறுகின்றன, எப்படி நடைபெறுகின்றன, என்னென்ன செய்யவேண்டும் என்பதற்கெல்லாம் என்னிடத்திலே யோசனை கேட்டு, அவர்கள் அடிகளாரையும் கலந்து கொண்டு, இவர்கள் அனைவரையும் விட மிகுந்த அக்கறையோடு, அடிகளார் அவர்கள் இந்த முயற்சியிலே ஈடுபடுகிறார் என்பதை நான் கேள்விப்பட்டு, அதுவே எனக்கு ஒரு பெருமை, சிறப்பு என்ற வகையிலே மகிழ்ச்சியிலே நான் ஆழ்ந்திருக்கின்றேன்.

இரண்டு படங்களை மேடையில் வைக்க வேண்டும்

இங்கே இந்த விழாவை நடத்த வேண்டும் என்று ஏறத்தாழ முப்பதுக்கும் மேற்பட்ட தமிழ் ஆர்வம் உடைய சங்கங்களும், ஆர்வலர்களும் விரும்பிய போதும், அடிகளார் அவர்கள் விரும்பியபோதும், தம்பி வைரமுத்து அவர்கள் விரும்பிய போதும், நான் அவர்களோடு தொடர்பு கொண்டு,



இன்னது செய்ய வேண்டும் என்று சொன்னதிலே முக்கியமான விஷயங்கள்; "இந்த மண்டபத்தினுடைய முகப்பில் இரண்டு படங்களை நீங்கள் மறவாமல் வைக்க வேண்டும்'' என்பதுதான். அதுதான் ஒன்று; திராவிடமொழிகளின் ஒப்பிலக்கணம் கண்ட கால்டுவெல் அவர்களுடைய படம். இன்னொன்று, முதன்முதலாக தமிழைச் செம்மொழியாக ஆக்கவேண்டும் என்று குரல் கொடுத்த சூரியநாராயண சாஸ்திரி அவர்களுடைய படம், அதாவது, பரிதிமாற் கலைஞர் என்று தன்னுடைய பெயரை தமிழிலே மாற்றிக் கொண்ட அந்தப் பெரியவருடைய படம். இரண்டு படங்களையும் இந்த மேடையிலே வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன். வந்த பிறகும் கூட எனக்குச் சந்தேகம். வரும்பொழுது வைரமுத்து, "மேடையை பின்னால் பார்த்துக் கொண்டே வாருங்கள், அழகாக இருக்கிறதா என்று சொல்லுங்கள்'' என்று சொன்னார். அதைத்தான் பார்த்தேனே தவிர, முன்னால் அந்தப் படங்கள் வைக்கப்பட்டிருக்கின்றனவா இல்லையா என்று எனக்குத் தெரியவில்லை. இங்கே வந்து அமர்ந்த பிறகு, என்னுடைய செயலாளரை "நீ முன்னால் போய் அந்தப் படங்கள் இருக்கிறதா என்று பார்த்து விட்டு வா'' என்று சொன்னேன். அவர் வந்து சொன்ன பிறகுதான் என்னுடைய சந்தேகம் தீர்ந்தது. ஏனென்றால், நான் இன்றைக்கு இங்கே வாரி வழங்கிய பெருமைகளை, சிறப்புக்களை, புகழாரங்களை யெல்லாம் அப்படியே ஏற்றுக் கொண்டேன் என்று பொருளல்ல. இவைகளெல்லாம், ஒரு நூறு ஆண்டுக்கு முன்பு இதற்காக விதை விதைத்த, இதற்காக குரல் எழுப்பிய பெரியவர்களைப் போய்ச் சேரவேண்டும் என்பதற்காகத்தான் (கைதட்டல்)



அந்தப் படங்களை இங்கே வைக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொண்டேன். அதுமாத்திரமல்ல; அதற்குப் பிறகு அவர்களுடைய குரல் எழுந்த பிறகு தமிழகத்தில் 1885ல் பரிதிமாற் கலைஞர் முதன்முதலாக அந்தக் குரலை எழுப்பிய பிறகு, அவர் மறைந்து 30 ஆண்டுகளுக்குப் பிறகு 1918ல் நடைபெற்ற சைவ சித்தாந்த மாநாட்டில், "செம்மொழியாக தமிழை ஆக்கவேண்டும்''என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்பதையும், நான் உங்களுக்கு நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தொடர் போராட்டத்தில் வெற்றி கிடைத்திருக்கிறது

அதைத் தொடர்ந்து, 1919, 1920ஆம் ஆண்டுகளில் கரந்தை தமிழ்ச் சங்கத்தினர் இதே போன்ற தீர்மானத்தை நிறைவேற்றினார்கள் என்பதையும், நாம் மறந்து விடக்கூடாது.

1998ல் சென்னை பல்கலைக் கழகம், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகம் ஆகியன இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றி, மத்திய அரசுக்கு, தமிழக அரசுக்கு அனுப்பி வைத்திருக்கின்றன.

இவைகளையெல்லாம் குறிப்பிடுவதற்குக் காரணம், இது ஒரு தொடர் பணி, தொடர் போராட்டம். இன்றைக்கு அதிலே வெற்றி கிடைத்திருக்கின்றது என்பதைத் தவிர, வேறொன்றும் என்னையோ, அல்லது என்னுடைய முயற்சிகளையோ, என்னுடைய பணிகளையோ பாராட்டுவதற்கு இதில் ஒன்றும் இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்வதற்காகத்தான் இவைகளைப் பற்றியெல்லாம் விபரமாக கூறுகின்றேன்.



தமிழ் ஒன்றுதான் முதல் செம்மொழியாக அறிவிக்கப்பட்டுள்ளது

ஒரு மொழி; செம்மொழியாக ஆவதற்கு, என்னென்ன தகுதிகள் வேண்டும் என்பதை நம்முடைய அடிகளார் அவர்களும், தம்பி வைரமுத்து அவர்களும், கவிக்கோ அவர்களும் இங்கே குறிப்பிட்டிருக்கின்றார்கள். இந்தத் தகுதிகள் எல்லாம் இருந்து தான், சமஸ்கிருதமோ அல்லது ஹிப்ரு மொழியோ, மற்ற மொழிகளோ இவைகளெல்லாம் உரசிப் பார்க்கப்பட்டுதான் செம்மொழிகளாக ஆக்கப்பட்டதா என்பதற்கான விபரம் நம்மிடத்திலே இல்லை. அதற்கான ஆதாரம் மத்திய அரசாங்கத்திலே கூட கிடையாது. நம்முடைய அமைச்சர் பெருமக்கள், மத்திய அரசிடத்திலே அணுகி, அங்கு நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலே இது பற்றி விவாதித்தபோது, அவர்களுக்குத் தரப்பட்ட விளக்கம்; செம்மொழி என்று ஒரு மொழி அங்கீகரிக்கப்பட்டு, அது சட்டபூர்வமாக இது வரையிலே வெளியிடப்படவில்லை. ஆனால், மரபு வழியாக, சம்பிரதாய முறையில், சட்டபூர்வமாக இல்லாமல் வடமொழி உள்ளிட்ட நான்கைந்து மொழிகளும், செம்மொழிகளாக இயங்கி வருகின்றன. அதற்கான பொருளுதவி, அந்த மொழியின் பெயரால் ஆண்டுக்கு பெயர் இவைகளெல்லாம் சூட்டப் பட்டிருக்கின்றன என்ற இந்த விபரத்தைத்தான் தந்தார்களே அல்லாமல்; செம்மொழி என்று இதுவரையிலே எந்த மொழிக்காவது ஒரு அங்கீகாரம் தரப்பட்டிருக்கிறதா என்றால்; இல்லை. நான் சொல்லுகின்றேன் பெருமையோடு. அந்த மொழிகளிலே ஒரு மொழியாக தமிழ் ஆகிவிட்டது என்ற பெருமையை விட, தமிழ் ஒன்றுதான் முதல் செம்மொழியாக அறிவிக்கப்பட்டிருக்கிறது என்ற பெருமைதான் மத்திய அரசால் நமக்கு வழங்கப் பட்டிருக்கிறது என்பதை இங்கே நான் மிகுந்த



மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

இங்கே எடுத்துக் காட்டப்பட்ட இந்த தகுதிகள் மாத்திரமல்ல; தொன்மை, தனித்தன்மை, பொதுமைப் பண்பு, நடுவு நிலைமை, தாய்மைத் தன்மை, பண்பாடு, கலை, பட்டறிவு வெளிப்பாடு, பிறமொழித் தாக்கமிலா தனித் தன்மை, இலக்கிய வளம், உயர் சிந்தனை, கலை, இலக்கியத் தனித் தன்மை வெளிப்பாடு – பங்களிப்பு, மொழிக் கோட்பாடு இவைகள் மாத்திரமல்லாமல், பிற நாடுகளிலே தமிழ் ஆட்சி மொழியாக இருக்கிறதா என்ற அந்த கேள்விக்கான விடையை தேடினால் கூட தமிழுக்கு அந்த பெருமை கிடைக்கும்.

தமிழ்; சிங்கப்பூரில், இலங்கையில் இருக்கின்ற ஆட்சி மொழிகளிலே ஒன்று என்பதை மறந்து விடக்கூடாது. மலேசியாவில் நாடாளுமன்ற மொழியாக தமிழ் இருக்கிறது. ஆனால், பிறந்த பூமியிலேதான் நாடாளுமன்ற மொழியாக தமிழ் இல்லை. இப்போது நாடாளுமன்றத்திலே அவ்வப்போது, தேவைப்படுகிற நேரத்தில் மொழி பெயர்க்கப்பட்டு உதவி செய்கிறார்களே அல்லாமல், அதிகார பூர்வமாக நாடாளுமன்ற மொழியாகவோ, மத்திய ஆட்சி மொழிகளில் தமிழும் ஒன்று என்கின்ற அங்கீகாரம் பெற்ற மொழியாகவோ தமிழ் இல்லை.

தமிழை ஆட்சிமொழிகளில் ஒன்றாக ஆக்கிவிடுவோம்

இங்கே பலரும் பேசும் பொழுது, "கருணாநிதி அவர்களே, தமிழை செம்மொழியாக ஆக்கியது மாத்திரம் போதாது, தமிழ் மத்திய ஆட்சி மொழியாகவும் ஆக வேண்டும். அதற்குப் பாடுபடுங்கள்" என்று சொன்னார்கள். இந்த வேண்டுகோளையும் நிறைவேற்ற வேண்டும் என்று



உரிமையின் காரணமாக என்னைக் கேட்டுக் கொண்டார்கள். இன்று கேட்டுக் கொண்ட இந்தச் செய்தி, வெளியிடப் படுவதற்கு முன்பே, சென்னையில் நடைபெற்ற பாராட்டு விழாவில் நான் பாராட்டுக்குப் பதில் அளித்து விட்டு, எனக்குத் தரப்பட்ட விருதுகளுக்கு, பரிசுகளுக்கு எல்லாம் நன்றியினை தெரிவித்து விட்டு, பேசும் பொழுது, "அடுத்த கட்டமாக தமிழ் இந்தியாவினுடைய மத்திய ஆட்சி மொழிகளில் ஒன்றாக ஆகிட நாம் பாடுபடுவோம்" என்று சொன்னேன். நிச்சயமாக உங்கள் அனைவரையும் இணைத்துக் கொண்டு, உங்களுடைய உதவியோடு, உங்களுடைய ஒத்துழைப்போடு, உங்களுடைய வலிவும் எனக்கு இருக்கிறது. நான் சார்ந்த இயக்கத்திற்கு இருக்கிறது. என்னுடைய தலைமையிலே இயங்குகின்ற இயக்கத்திற்கு இருக்கிறது. அந்த வலிவைக் கொண்டே இந்தியாவினுடைய ஆட்சி மொழிகளிலே ஒன்றாக தமிழை ஆக்கிடுவோம்.

தமிழேதான் ஆட்சி மொழியாக இருக்கவேண்டும் என்ற பிடிவாதம் அல்ல, தமிழும் ஆட்சி மொழிகளில் ஒன்றாக இருக்க வேண்டும். நான் தமிழேதான் இருக்க வேண்டும் என்று சொல்லவில்லை; நான் சொல்லா விட்டாலும்கூட, சொன்னதாக சில 'நல்ல' பத்திரிகைகள் வெளியிடுமே யானால், அதனால் இந்தியாவிலே பல மாநிலங்களிலே குழப்பங்கள் ஏற்படும். ஏனென்றால், அவரவர் மொழி அவரவர்களுக்கு சிறப்பானது. அவரவர் மொழி ஆட்சி மொழியாக வரவேண்டும் என்கின்ற எண்ணம் எல்லோருக்கும் உண்டு. தமிழ் தான் உயர்ந்த மொழி என்று சொல்ல நமக்கு உரிமை உண்டு. காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு என்பதைப் போல தமிழ் உயர்ந்த மொழி என்று சொல்ல உரிமை உண்டு. அதற்கான ஆதாரங்கள்,



எடுத்துக்காட்டுகள் ஏராளம் உண்டு, வரலாறு உண்டு, இலக்கியம் உண்டு, காவியங்கள் உண்டு, காப்பியங்கள் உண்டு. இருந்தாலும் கூட, அவைகளைச் சொல்லி மார்தட்டுகின்ற காரணத்தால், இந்தியாவினுடைய ஒற்றுமைக்கு ஒருமைப் பாட்டுக்கு, ஒரு சிறிது ஊனமும் ஏற்பட்டு விடக்கூடாது என்பதிலே நான் மிகுந்த கவலை கொள்பவனாக இருக்கின்றேன்.

எங்கள் மொழியின் உரிமைகளை விட்டுத் தர மாட்டோம்

ஒரு குழப்பத்தை ஏற்படுத்த, குழப்பத்தை ஏற்படுத்துவதன் மூலம், கிடைத்ததையும் பறித்துக் கொள்ள, கிடைத்ததையும் இல்லாமல் செய்ய சில பேர் அந்த ஏற்பாடுகளிலே இறங்கலாம். எனவே, நான் மிகுந்த எச்சரிக்கையோடு சொல்வது; எல்லா மொழிகளையும் நாங்கள் மதிக்கிறோம். ஆனால், அதற்காக எங்கள் மொழியினுடைய உரிமைகளை விட்டுத்தர மாட்டோம். எந்த மொழியின் மீதும் நமக்கு பகை கிடையாது. ஆனால் எங்கள் மொழி மீது இருக்கின்ற பற்றை, பாசத்தை நாங்கள் விட முடியாது. எனவே தான், இன்றைக்கு மத்திய ஆட்சி மொழிகளில் ஒன்றாக தமிழும் இருக்க வேண்டும் என்று சொல்கிறோம்.

எல்லா மொழிகளையும் மத்திய ஆட்சி மொழிகளாக ஆக்க மிகுந்த சிரமம் இருக்கிறது என்று சொல்வீர்களே யானால், இருக்கிற மொழிகளிலே வளம் பொருந்தியது எது? இலக்கிய நயம் பொருந்தியது எது? வரலாற்றுச் சான்றுகளைக் கொண்டது எது? என்பதை ஆராய்ந்து பார்த்து, அதற்கு ஒரு குழுவை நியமித்து, அந்த மொழியை முதன்முதலாக மத்திய ஆட்சி மொழிகளிலே ஒன்றாக ஆக்குங்கள். ஆங்கிலமும் இருக்கட்டும், இந்தியும் இருக்கட்டும், இன்னும் நீங்கள்



நினைக்கின்ற மொழிகள் எல்லாம் கூட இருக்கட்டும், எங்கள் தமிழ் மொழியும் அங்கே ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்பது தான் என்னுடைய கொள்கை, என்னுடைய வேண்டுகோள். அதை இன்றைக்கு இருக்கின்ற மத்திய அரசு செய்யும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

ஏனென்றால், குடியரசுத் தலைவர் உரையிலேயே தமிழ் செம்மொழியாக ஆக்கப்படும் என்ற நற்செய்தியை வெளியிட்ட மத்திய அரசு, அதற்கு அடுத்த வரியில் ஆட்சிமொழியாக ஆக்குவதற்கு கலந்து ஆலோசிக்க ஒரு குழுவும் உடனடியாக நியமிக்கப்படும் என்று உறுதி அளித்திருக்கின்றார்கள். அந்த உறுதியை அவர்கள் நிறைவேற்ற நம்முடைய அமைச்சர் பெருமக்களும், தமிழகத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும், வெறுமனே நாற்பதுக்கு நாற்பது என்று சொல்லிக் கொண்டிருந்தால் போதாது. அந்த நாற்பதும் அதற்காக பாடுபட்டு, இந்தியாவினுடைய ஆட்சி மொழிகளிலே ஒன்றாக தமிழும் ஆவதற்கு தொடர் பணியினை ஆற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். ஆற்றுவார்கள் என்று நான் நம்புகின்றேன். ஆற்ற மறந்தால் அவ்வப்போது நினைவூட்டிக் கொண்டிருப்பேன். நினைவூட்ட வேண்டிய முறையிலே நினைவூட்டுவேன் என்பதையும் நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன்.

எனவே, இந்த நிகழ்ச்சி, ஒன்று முடிந்து விட்டது என்பதற்காக அதை பாராட்டுகின்ற நிகழ்ச்சி அல்ல. இன்னும் சில முடிய வேண்டும் என்பதற்காக அதை



தூண்டுகின்ற நிகழ்ச்சியாகத்தான் இந்த நிகழ்ச்சியை நான் கருதுகின்றேன். அப்படிப்பட்ட தூண்டுதலை எனக்கும், என்னுடைய நண்பர்களுக்கும், தமிழ் ஆர்வலர்களுக்கும், தமிழ் ஆர்வம் படைத்த இயக்கங்களுக்கும் உருவாக்குவதற்காக இந்த விழா நடைபெறுவதாகவே நான் கருதுகின்றேன்.

ஒரு ஆட்சியின் ஆதரவு மொழிக்கு இருந்தால்தான் அந்த மொழி வளரமுடியும்

சென்னையிலேயே நான் சொன்னேன். இது என் ஒருவனுக்கு மாத்திரம் சொந்தமான சிறப்பு அல்ல. நான் அப்படி இதை நான் தான் செய்தேன் என்று மார்தட்டிக் கொள்கின்ற மடையனும் அல்ல. எனக்கு மக்களைப் பற்றித் தெரியும். நான் சென்னையிலே குறிப்பிட்டதை மீண்டும் சொல்ல விரும்புகின்றேன். அரசு எவ்வழியோ அவ்வழிதான் மொழிகளுடைய வளர்ச்சியும் இருக்கமுடியும். யாரும் தவறாக கருதிக் கொள்ளக்கூடாது.

சோழ மன்னன் இராஜராஜன் புகழுக்குரியவன், படைபலம் கொண்டு தடை பல கடந்து, கடல் வரையிலே சென்று கடல் போர் நிகழ்த்தி, அவனும் அவனுடைய மகன் இராஜேந்திர சோழனும், 'கடாரம் கொண்டான்', 'கங்கை கொண்டான்' என்கின்ற பெயர்களையெல்லாம் பெற்றவர்கள்தான். இருந்தாலும் கூட, அவர்களுடைய வரலாற்றில் தமிழை வளர்த்தார்கள் என்று இல்லை. அழித்தார்கள் என்று இல்லை. ஆனால் அவர்கள் வளர்த்தது வடமொழியை, தமிழை வளர்க்கவில்லை.



பல்லவர்கள் ஆட்சி சிறந்த ஆட்சியாக, வீரமுள்ள ஆட்சியாக விளங்கியது. புலிகேசி மன்னனை வாதாபி வரையிலே துரத்தி அடித்த ஆட்சியாக வீரமிக்க ஆட்சியாக விளங்கியது உண்மைதான். ஆனால், அந்த ஆட்சி தமிழை வளர்த்த ஆட்சி என்ற ஒரு வரியைக் கூட என்னால் அந்த வரலாற்றுப் புத்தகத்திலே படிக்க முடியவில்லை. இவைகளை யெல்லாம் சொல்வதற்குக் காரணம், ஒரு ஆட்சியினுடைய ஆதரவு அந்த மொழிக்கு இருந்தால்தான், அந்த மொழி பேசுகின்ற மக்கள் வளர முடியும், மொழி வளர முடியும்.

தம்பி வைரமுத்து சொன்னதைப் போல கடந்த கால ஆட்சியில், எத்தனை கடிதங்கள் நான் எழுதியிருப்பேன்? அவருக்கே தெரியும். பிரதமராக இருந்த வாஜ்பய் அவர்களுக்கு செம்மொழி கோரிக்கைக்காக எத்தனை கடிதங்கள் நான் எழுதியிருப்பேன். எத்தனை முறை அதைப் பற்றி பேசியிருப்பேன். ஏன் அன்றைக்கு இருந்த மாநில அரசாவது இதைப் பற்றி அக்கறை எடுத்துக் கொண்டதா என்றால் இல்லை. நான் ஒன்றை சொல்ல விரும்புகின்றேன். இங்கே வருவதாக இருந்து உடல் நலமில்லாத காரணத்தால் நம்முடைய தமிழறிஞர் மணவை முஸ்தபா அவர்கள் வர முடியவில்லை. அவர் 'வள்ளுவர் தமிழ் பீடம்' என்ற பத்திரிகையில் எழுதிய ஒரு கட்டுரை. கவிஞர் சுரதாவின் மகன், தம்பி சுரதா கல்லாடன் நடத்துகின்ற பத்திரிகை. அதில் எழுதி இருக்கின்றார்.

அதிலே "1980ல் மதுரையில் நடைபெற்ற 5வது உலகத் தமிழ் மாநாடுதான் செம்மொழி பற்றி விரிவாகப் பேச ஏற்ற களமாக அமைந்தது. என் செம்மொழி ஆய்வுரையைச்



செவிமடுத்த அப்போதைய முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள், இதனை ஒரு கோரிக்கையாக அரசுக்கு அனுப்புமாறு பணித்தார். அவ்வாறே அனுப்பினேன். ஆனால் எதுவும் நடக்கவில்லை. தொடர்ந்து நினைவூட்டுக் கடிதம் எழுதிய நான் 1984ல் எனக்குக் கலைமாமணி விருது வழங்கியதற்கு நன்றி தெரிவித்து எழுதிய கடிதத்தில் செம்மொழி பற்றி நினைவூட்டி எழுதினேன். அதனை எம்.ஜி.ஆர். தமிழ் வளர்ச்சித் துறைச் செயலாளருக்கு மேல் நடவடிக்கைக்கு அனுப்ப, தமிழ் வளர்ச்சித்துறைச் செயலாளரோ, மணவை முஸ்தபா கூறுவது போல் தமிழைச் செம்மொழியாக்கினால், அந்த மொழியை செத்த மொழிகளின் பட்டியலில் சேர்த்ததாக ஆகிவிடும்'' என்று எழுதி, "ஆகவே, இந்த கோப்பை இத்தோடு முடித்து வைக்கிறோம்'' என்று பைலையே முடித்து விட்டார்கள்.

செத்த மொழி சமஸ்கிருதம், அது பேசாத மொழி. எழுதலாம், பேச முடியாது. அந்த மொழி இப்பொழுது செம்மொழியாக இருக்கிறது. தமிழையும் செம்மொழி யாக்கினால், அது செத்த மொழியோடு சேர்ந்துவிடும் என்று சொல்லி கோப்பை முடித்து வைக்கிறார்கள். அதிகாரிகள் மட்டத்திலேயே தமிழுக்கு செம்மொழி என்ற சிறப்பு கிடைக்க முடியாத தடை போடப்படுகிறது.

நான் கேட்கிறேன், செத்த மொழி என்பது உண்மையானால், அதென்ன இழிவா? இல்லையே. செத்தவர்களை அமரர்கள் என்கிறோம். உயர்வாகவே சொல்கிறோம். அப்படி அமர மொழியாக வடமொழி பாவிக்கப்படுகிற அந்த சூழ்நிலையில், செத்த மொழியாகவே இருந்தாலும் கூட தமிழ் மொழியை அந்தப் பட்டியலிலே சேர்க்க



மனமில்லாமல், அன்றைக்கு உதறித் தள்ளி விட்டார்கள். "கோப்பை இத்தோடு முடித்து விடுகிறோம்." என்று எழுதி எம்.ஜி.ஆருக்கு அனுப்பி விட்டார்கள். அவரும் ஏதோ தமிழ்த்துறைச் செயலாளர்கள் சொல்வது சரியாகத் தான் இருக்கும் போல் இருக்கிறது என்று கருதி, அவரும் கோப்பை முடிப்பதற்கு கையெழுத்துப் போட்டுவிடுகிறார்.

தமிழ் செம்மொழியாக நம்முடைய மடிகளிலே தவழ்கிறது

இப்படி தமிழ் செம்மொழியாக ஆவதற்கு எத்தனையோ தடைகள் இருந்து, அந்த தடைகள் எல்லாம் இன்றைக்கு உடைபட்டது என்றால், கடந்த காலத்திலே இருந்த மாநில அரசானாலும், மத்திய அரசானாலும், நம்முடைய முறையீடுகளையெல்லாம் தூக்கி மூலையிலே போட்டு விட்ட அரசுகளாக இருந்தன. இந்த அரசு அம்மையார் திருமதி சோனியா காந்தி அவர்களுடைய வழிகாட்டுதலோடு அமைந்த குழு, அந்த குழுவினுடைய கருத்துக்களை, சிந்தித்து, பரிசீலித்து ஏற்றுக்கொள்கின்ற நிலையிலே பிரதமர் பதவியை ஏற்றுக் கொண்டிருக்கின்ற டாக்டர் மன்மோகன் சிங் அவர்களுடைய அரசு உடனடியாக நம்முடைய உணர்வை புரிந்து கொண்டு, உடனடியாக செம்மொழியாக ஆக்குவோம் என்று குடியரசுத் தலைவர் உரையிலே அறிவித்து, அறிவித்ததை நீங்கள் எப்போது ஆக்கபூர்வமாக அமலாக்கப் போகிறீர்கள் என்று நாங்கள் வலியுறுத்தி, வலியுறுத்தி இன்றைக்கு அது ஆக்கபூர்வமாக, அமைச்சரவைக் கூட்டத்திலேயே அங்கீகாரம் பெற்று, தமிழ் மொழி, செம்மொழியாக நம்முடைய மடிகளிலே தவழ்ந்து விளையாடுகின்ற ஒரு காட்சியை காணுகின்றோம்.




இந்தக் காட்சி கருணாநிதியால் ஏற்பட்டதல்ல. அல்லது அவருடைய கட்சியால் ஏற்பட்டதல்ல. நான் சொன்னேனே ஆரம்பத்திலிருந்து, பரிதிமாற் கலைஞரிலிருந்து படிப்படியாகச் சொன்னேனே, அத்தனை அமைப்புக்கள், அத்தனை தமிழறிஞர்கள் அத்தனை தமிழ்ப் புலவர்கள் இவர்களெல்லாம் நம்முடைய நன்றிக்கு உரியவர்கள்.

ஏன் என்னை வளர்த்த தந்தை பெரியார் ஊட்டிய உணர்வு, என்னை ஆளாக்கிய அறிஞர் அண்ணா ஊட்டிய உணர்வு, அவர்களுடைய வழிகாட்டுதல் இவைகள் எல்லாம் இணைந்துதான் இன்றைக்கு இந்த வெற்றியை நமக்கு கொடுத்திருக்கின்றன என்பதை யாரும் மறந்து விடக் கூடாது.

இது ஒருவருடைய உழைப்பு அல்ல. அடிகளார் அவர்கள் இங்கே அழகாக சொன்னதைப் போல, நாற்பது பேரல்ல, அந்த நாற்பது பேரை வெற்றி பெறச் செய்தது யார்? என் எதிரே அமர்ந்திருக்கின்ற நீங்கள் அல்லவா? தமிழ் நாட்டிலே இருக்கின்ற வாக்காள பெருமக்கள் அல்லவா? அவர்கள் எங்கள் மீது வைத்த நம்பிக்கை வீண் போகவில்லை. நாங்கள் தமிழ் மீது வைத்துள்ள ஆசை, பாசம் இவைகள் எல்லாம் வீண் போகவில்லை. வீண் போகாமல் பாதுகாத்த பெருமை எனக்கல்ல. என்னுடைய தலைமையிலே நாற்பது பேரை வெற்றி பெறச் செய்த இந்த நாட்டு வாக்காள பெருமக்களுக்கு உரியது. தமிழர்களுக்கு உரியது. எனவே, இந்தப் பாராட்டும், நன்றி கூறும் விழாவும், அவர்களுக்கே உரியது. அவர்களுக்கே காணிக்கை என்று கூறி விடைபெறுகிறேன்.

(இவ்வாறு மதுரையில் 17.10.2004 அன்று முத்தமிழ் மன்றம் நடத்திய பாராட்டு விழாவில் தலைவர் கலைஞர் அவர்கள் ஏற்புரை ஆற்றினார்.)



சென்னையில்
தமிழ்மொழி அகாதமி சார்பில்
நடைபெற்ற பாராட்டு விழாவில்
தலைவர் கலைஞர் ஏற்புரை

இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்த விழா நிகழ்ச்சியில் உங்களோடு என்னையும் இணைத்துக் கொள்வதில் நான் மிகுந்த பெருமையடைகின்றேன். மகிழ்ச்சி யடைகின்றேன். தமிழ்மொழி செம்மொழி என அறிவிக்கப் பட்டதைக் கொண்டாடுகின்ற வகையில் நாமெல்லாம் இங்கே கூடியிருக்கிறோம். அதற்கு ஒரு பாராட்டு விழா என்றும், அந்தப் பாராட்டு விழா எனக்கென்றும் குறிப்பிட்டிருப்பதை என்னால் ஏற்றுக் கொள்ள இயலவில்லை. திராவிடமொழி ஒப்பிலக்கணம் கண்ட கால்டுவெல் என்கின்ற பேரறிஞர், அவரைத் தொடர்ந்து பல ஆண்டு கால இடைவெளிக்குப் பிறகு, தமிழ் மொழி செம்மொழியாக ஆக்கப்பட வேண்டும் என்று முதல் குரல் கொடுத்த சூரியநாராயண சாஸ்திரி என்ற பரிதிமாற் கலைஞர், அவர்களைத் தொடர்ந்து தமிழ்ச் சங்கங்கள் பல, தமிழ்ப் புலவர்கள் பலர், தமிழ்ப் பேரறிஞர்கள் பலர் – இப்படி நூற்றுக் கணக்கில், ஆயிரக் கணக்கில் இந்த ஒரு நிலை நாம் எய்துவதற்காகப் பாடுபட்டிருப்பதை எண்ணிப் பார்க்கும்போது அவர்களுக் கெல்லாம் நீங்கள் தெரிவிக்க வேண்டிய பாராட்டுக்களை, வழங்க வேண்டிய நன்றியை என்வாயிலாக இன்றைக்கு வழங்கியிருக்கின்றீர்கள் (கைதட்டல்) என்றுதான் நான் கருதுகிறேனேயல்லாமல், நீங்கள் நன்றியினை ஒரு மூட்டையாகக் கட்டி, என்னுடைய தலையிலே வைத்து, இதைக் கொண்டு போய் அவர்களிடத்திலே சேர்த்திடு என்று கட்டளையிட்டிருக்கிறீர்கள்.



அந்தக் கட்டளையை நான் இங்கே நிறைவேற்றிக் கொண்டிருக்கிறேன் (கைதட்டல்) என்பதல்லாமல், இவைகள் எனக்காகக் குவிந்த பாராட்டுக்கள், எனக்காக வந்த வாழ்த்துக்கள், எனக்காகச் சொல்லப்பட்ட நன்றியுரைகள் என்று நான் கருதினால் என்னைவிட ஒரு பைத்தியக்காரன் யாரும் இருக்க முடியாது.

நான் உளிதான், சிற்பிகள் பல்லாயிரவர்

நான் ஒரு கருவி. இந்தக் கருவியைத் தமிழ்நாட்டு மக்கள் பயன்படுத்திக் கொண்டார்கள். தமிழ்ப் புலவர்கள், தமிழ்ப் பேரறிஞர்கள் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். உளி சிற்பம் செதுக்குவதற்காகப் பயன்படுத்தப்பட்டால், அந்த உளியே அந்தச் சிற்பத்தை செதுக்கியதாக பொருள் கொள்ள முடியுமா? (கைதட்டல்) அந்தப் பணியை ஆற்றியது சிற்பி. அதைப்போல நான் உளி தான், சிற்பிகள் பலர், பல்லாயிரவர். அந்தச் சிற்பிகளுக்கெல்லாம் என் சிரம் தாழ்ந்த வணக்கத்தை, நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். (பலத்த கைதட்டல்)


இன்னும் கொஞ்சம் அணுகிப் பார்த்தால் எந்தவொரு மொழியும் ஒரு அரசைப் பொறுத்துத்தான் வளரமுடியும். வரலாற்றை நீங்கள் புரட்டிப் பார்ப்பீர்களே யானால் நாட்டில் உருவாகின்ற அரசுகளைப் பொறுத்துத்தான் மொழி ஆதிக்கம் பெற்றிருக்கின்றது. நாம் பேசுகிறோம், இன்றைக்குக் கூடப் பேசுகிறோம், தஞ்சையை ஆண்ட ராஜராஜ சோழனைப் பற்றி. ஒரு இளைஞனைப் பார்த்து, ராஜராஜ சோழன் காலத்திலே தமிழ் எப்படி வளர்ந்தது என்று கேட்டால், ஆயிரக்கணக்கான தமிழ்ப் புலவர்களுக்கு அவர் அருட்கொடை, பொருட்கொடை இவைகளையெல்லாம் வழங்கினார் என்று அந்த இளைஞன் சொல்வான். ஆனால் உண்மை அது அல்ல.



ராஜராஜ சோழன் வளர்த்தது தமிழ் மொழியை அல்ல, வடமொழியை. சமஸ்கிருதத்தைத்தான் ராஜராஜ சோழன் வளர்த்தான் என்று வரலாறு கூறுகிறது. சென்னைக்கு அருகேயுள்ள காஞ்சிபுரத்தை ஆண்டவர்கள் பல்லவ மன்னர்கள். அவர்களுடைய காலத்திலே, அவர்கள் தமிழை வளர்க்கவில்லை. ஒரிருவர், நந்திவர்மன் போன்றவர்கள் தமிழ்க் கவிஞர்களாக வாழ்ந்தார்களே அல்லாமல், ஆண்ட மன்னர்கள் அத்தனை பேரும் வடமொழியை, பாலி மொழியை வளர்ப்பதற்காகத்தான் பாடுபட்டார்கள், வட மொழியிலேதான் அவர்கள் நாடகங்களை எழுதினார்கள், கவிதைகளைத் தீட்டினார்கள், எனவே ஒரு மொழி வளர அரசும், அரசின் ஆதிக்கமும் அந்த அரசை நடத்துகின்றவர்களுடைய ஆதரவும் தேவை. அப்படிப் பார்த்தால் தமிழ் செம்மொழியாக ஆவதற்கான வழிவகை வகுக்கின்ற ஒரு அரசு இந்தியாவிலே உருவாயிற்று என்பதே உண்மை.

பிரதமர் மன்மோகன் சிங் – சோனியாகாந்திக்கு நன்றி

அந்த அரசின் கடமையாகத்தான் தமிழ் செம்மொழியாக இன்றைக்கு ஆக்கப்பட்டிருக்கின்றது. அந்த அரசைப் பரிபாலிக்கின்ற யோசனைகளைச் சொல்ல ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழுவுக்கு வழிகாட்டும் தலைவியாக திருமதி சோனியா காந்தி அவர்கள் (கைதட்டல்) தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அந்தக் குழுவின் கருத்துப்படி, நாடாளுமன்ற உறுப்பினர்களுடைய பெரும்பான்மை கருத்துப்படி, டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள் இந்தியப் பிரதமராகப் பொறுப்பேற்றார்கள். எனவே அரசுதான் தமிழ் செம்மொழி ஆவதற்குப் பொறுப்பு. அந்தப் பொறுப்பை நிறைவேற்றிய டாக்டர் மன்மோகன் சிங் அவர்களுக்கும், வழிகாட்டும் குழுவிற்கு பொறுப் பேற்றிருக்கின்ற



திருமதி சோனியாகாந்தி அம்மையார் அவர்களுக்கும் இந்தப் பெருவிழாவின் சார்பாக நான் நன்றியினைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். (கைதட்டல்)

என் தாய், தந்தை, பெரியார் – பேரறிஞர் அண்ணாவுக்கு நன்றிக் காணிக்கை!

அதேநேரத்தில் 1924ஆம் ஆண்டு 80 ஆண்டுகளுக்கு முன்பு தமிழகத்தில், தஞ்சைத் தரணியில் எங்கோ ஒரு சிற்றூரில், திருக்குவளை என்ற கிராமத்தில் முத்துவேலருக்கும் அஞ்சுகம் அம்மையாருக்கும் மகனாகப் பிறந்த நான் இன்றைக்கு செட்டிநாட்டரசர் அவர்களுடைய தலைமையில் நடைபெறுகின்ற இந்தப் பெருவிழாவில் தமிழ் நெஞ்சங்கள் எல்லாம் வாழ்த்த, இத்தனை போற்றுதலுக்கும், புகழுதலுக்கும், பெருமைக்கும் உரியவனாக ஆகி யிருக்கிறேன் என்றால் இதற்குக் காரணமாக என்னைப் பெற்றெடுத்த தாய் தந்தையருக்கும், என்னை வளர்த்து ஆளாக்கிய தந்தை பெரியார் அவர்களுக்கும், வழி காட்டி உய்வித்த அண்ணன் பேரறிஞர் அண்ணா அவர்களுக்கும் என்னோடு ஒத்துழைத்து, உறுதுணையாக இருக்கின்ற உங்கள் அனைவருக்கும், எல்லா உடன் பிறப்புகளுக்கும் இந்த நன்றியைக் காணிக்கையாக ஆக்குகின்றேன். (பலத்த கைதட்டல்)

தமிழ் மொழிக்கு ஒரு சிறப்பு உண்டு. இன்னின்ன சிறப்பு வேண்டும் என்றெல்லாம் கேட்கப்பட்டது. ஒரு மொழி செம்மொழியாகக் கூறப்படுவதற்கு இன்னின்ன தகுதிகள் வேண்டுமென்று வரையறுக்கப்பட்டது.

தொன்மை (Antiquity), தனித்தன்மை (Individuality), பொதுமைப் பண்பு (Common character), நடுவு நிலைமை (Neutrality), தாய்மைத் தன்மை (Parental Kingship), பண்பாடு, கலை, பட்டறிவு வெளிப்பாடு, பிறமொழித் தாக்க



மில்லாத தனித் தன்மை, இலக்கிய வளம் (Literary Prowess). உயர் சிந்தனை (Noble Ideas and Ideals), கலை, இலக்கிய தனித்தன்மை வெளிப்பாடு – பங்களிப்பு, மொழிக் கோட்பாடு (Linguistic Principles) ஆகிய இந்த 11 தகுதிகளை ஒரு மொழி, செம்மொழியாக அறிவிக்கப் படுவதற்குத் தேவை என்று வரையறுக்கப்பட்டுள்ளது.

இவைகளுக்கும் மேலான தகுதிகளைப் பெற்ற மொழிதான் தமிழ் மொழி (கைதட்டல்) என்பதால்தான் இப்போது தாராளமாக செம்மொழி என்கின்ற அறிவிப்பு இந்த மொழிக்குக் கிடைத்திருக்கின்றது.

இன்னும் இதனுடைய சிறப்புக்களை நாம் எண்ணிப் பார்த்தால் பெரும்பாலும் எந்த மொழியும் பெயர்ச்சொல்லிலும், வினைச்சொல்லிலும் ஒரே பொருளைக் கொண்ட மொழியாக இருக்க முடியாது. மொழி என்றால் அந்தச் சொல் பெயர்ச் சொல்லாகவும் இருக்கிறது, வினைச் சொல்லாகவும் இருக்கிறது. ஒருவனைப் பார்த்து "மொழி" என்றால் பேசு என்று அர்த்தம். எங்கே "மொழி பார்க்கலாம்" என்றால் பேசு பார்க்கலாம் என்றால் அங்கே வினைச் சொல்லாகவும் பயன்படுத்தப்படுகிறது. மொழி என்று சொல்லும்போது அது பெயர்ச் சொல்லாகவும் அமைகிறது. இப்படி பெயர்ச் சொல்லாகவும், வினைச் சொல்லாகவும் அமைகிற மொழி – நான் அறிந்த வரையில் – இங்கே என்னை விட பெரும் புலவர்கள் பலபேர் இருக்கிறார்கள் – அவர்களுக்கெல்லாம் இந்த விஷயத்தில் என்னை விட அதிகமாகத் தெரியும். நான் அறிந்த வரையில் இரண்டும் ஒன்றாக, பெயர் சொல்லும், வினைச் சொல்லும் ஒன்றாக அமைந்த மொழி தமிழ் என்றே கருதும்போது, (கைதட்டல்) வேறு மொழிகளிலும் இப்படி இருந்தால், அது தமிழுக்கும் இருக்கிறது என்று நான் பெருமைப்படுகிறேன்.



அதைப் போல இசை என்றால் பாடு என்றும் சொல்லலாம், பாட்டு என்றும் சொல்லலாம். இசை என்றால் பாட்டு. ஒரு குழந்தையைப் பார்த்து எங்கே நீ இசை கேட்கலாம் என்றால் பாடு என்றும் பொருள் கொள்ளலாம்.

மத்தியிலே ஆட்சி மொழியாகவும் இந்த மொழி ஆகவேண்டுமென்று அடுத்த கட்ட கோரிக்கையை நான் வைக்கவேண்டுமென்று நம்முடைய ஆர்.எம்.வீ. அவர்களும், உவமைக் கவிஞர் சுரதா அவர்களும், வாழ்த்துரை வழங்கியவர்களும் இங்கே குறிப்பிட்டார்கள். உங்கள் முன்னிலையிலே நான் அந்த உறுதியை எடுத்துக் கொள்கிறேன். (பலத்த கைதட்டல்) இன்று செம்மொழியாக ஆக்கப்பட்டு, அறிவிக்கப்பட்ட தமிழ், இந்திய ஆட்சி மொழிகளில் ஒன்றாக ஆவதற்கு நிச்சயமாக நான் குரல் கொடுப்பேன். என்னைத் தலைவனாகக் கொண்டிருக்கின்ற இயக்கம் போராடும், வாதாடும். போராடத் தேவையில்லாமலே வாதாடுகின்ற நேரத்திலேயே வழங்குவார்கள், இந்தியாவின் ஆட்சி மொழிகளில் தமிழ்மொழி என்ற அந்த அறிவிப்பை மத்தியிலே பேரரசை நடத்துபவர்கள் வழங்குவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு நிரம்ப உண்டு.

நான் என்ற முனைப்பு எனக்கு
என்றைக்கும் இருந்ததில்லை

கடந்த காலத்தில் தமிழ் செம்மொழியாக ஆவதற்காகவும், ஆட்சி மொழிகளில் ஒன்றாக ஆவதற்காகவும் விழுப்புரம் மாநாட்டிலே தீர்மானம் நிறைவேற்றி போராட வேண்டியிருந்தது. ஒரு லட்சம் பேர் என்னுடைய தலைமையிலே உள்ள இந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் சிறைச்சாலைக்கு செல்லவேண்டியிருந்தது. அப்பொழுதும் கவனிக்கப்படும், பார்ப்போம் என்ற ஒரு ஆறுதல் மொழி கூட கடந்த காலத்திலே



இருந்த அரசிடமிருந்து நமக்குக் கிடைக்கவில்லை. ஆனால் இந்த அரசு, இன்றைக்கு இந்தியாவை ஆண்டு கொண்டிருக்கின்ற அரசு, குறைந்தபட்ச செயல் திட்டத்தை வகுக்கும்போதே, நானும், தமிழகத்தைச் சேர்ந்த ஜனநாயக முற்போக்குக் கூட்டணியைச் சேர்ந்த தலைவர்களும் எடுத்துச்சொன்னவுடன் – இதில் நான் மாத்திரம் பெருமை தேடிக்கொள்ள விரும்பவில்லை, நான்தான் செய்தேன் என்று சொல்லுகின்ற இந்த நான் என்கின்ற முனைப்பு எனக்கு என்றைக்கும் இருந்ததில்லை (கைதட்டல்), எப்போதும் இருந்ததில்லை, இனியும் வரக்கூடாது என்று நீங்கள் வேண்டிக் கொள்ளுங்கள் என்று உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். வராது, ஏனென்றால் இன்று நேற்றல்ல, நான் இளமைப் பிராயத்திலே ஒரு கல்லூரியிலே பேசும்போது குறிப்பிட்டதை அடிக்கடி நினைவுபடுத்திக் கொண்டு வருகிறேன், எழுதும்போதும், பேசும்போதும்.

நான் என்பது – நான் எம்.ஏ.எம். ராமசாமி அவர்களைச் சந்தித்தேன் – என்று சொல்லும்போது வேண்டுமானால் அப்போது நான் என்பதை குறிப்பதற்காகப் பயன்படுத்தலாம். ஆனால் "நான் செய்தேன்", "நான் இதை நிலைநிறுத்தினேன்" என்று சொல்லும் போது "நான்" மறைய வேண்டும், அங்கே "நாம்" வரவேண்டும். (கைதட்டல்)

சொல்லிப் பாருங்கள் என்று கூடச் சொல்வேன். நான் என்று சொன்னால், இரண்டு உதடுகளும் ஒட்டாது. நாம் என்று சொன்னால் இரண்டு உதடுகளும் ஒட்டும். உறவு ஒட்ட வேண்டுமேயானால் நாம் என்றுதான் சொல்ல வேண்டும். நான் என்று சொன்னால் உறவே ஒட்டாது. எனவேதான் நாம் அதைச் செய்து முடிக்க, எத்தகைய முறை ஆனாலும் அந்த முறையைப் பின்பற்ற வேண்டும், கையாள வேண்டும் என்று நான் உங்களையெல்லாம் கேட்டுக் கொள்கிறேன்.



திராவிட முன்னேற்றக் கழகம் என்று நான் தலைமையேற்றிருக்கின்ற கழகத்தை, இயக்கத்தை இங்கே பெயர் குறிப்பிட்டுச் சொல்லி, அதன் சார்பாக போராடுவோம் என்று சொல்ல மாட்டேன். ஒரு காலத்தில் தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, நாவலர் சோமசுந்தர பாரதியார் அவர்களும், அருமை அண்ணன் முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்களும் நடத்திய மொழிப் போராட்டம், ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார், முத்தையா செட்டியார் இவர்கள் எல்லாம் வாழ்த்து வழங்கி நடைபெற்ற போராட்டம், திராவிடர் கழகத்தின் சார்பிலோ அல்லது காங்கிரஸ் கட்சியின் சார்பிலோ அல்லது எந்தவொரு கட்சியின் சார்பிலோ நடைபெற வில்லை. அது தமிழர்களுடைய போராட்டமாகத்தான் அன்றைக்கு நடைபெற்றது.

அதைப்போல தமிழ் இனத்தின் போராட்டமாக, இந்தியாவில் எல்லா மொழிகளும், மாநிலத்திலே ஆட்சி மொழிகளாக இருக்கின்ற அத்தனை மொழிகளும், இன்னும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமே யானால் அட்டவணை யிலே இடம் பெற்றிருக்கின்ற தமிழ் உள்ளிட்ட அத்தனை மொழிகளும் ஆட்சிமொழிகளாக மத்தியிலே இடம் பெறவேண்டு மென்பதற்காக நாம் வாதாடுவோம். அதற்காக நம்மை சர்வபுரி தியாகம் செய்யவும் தயாராக இருப்போம் என்ற உறுதியை இங்கே எடுத்துக் கொள்வோம்.

ஆர்.எம்.வீ. அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். அடிக்கடி சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கும் சொன்னார்கள். தமிழ், தமிழ்நாட்டிலே கட்டாய மொழியாக ஆக இயலவில்லை, அதற்குள்ள காரணத்தை கலைஞர் அறிவார் என்று குறிப்பிட்டார்கள். அவரும் அறிவார், நானும்



அறிவேன். ஆனால் அதை இன்னும் வெளிப்படையாக விளக்க நான் முன்வரவில்லை. ஆனால் அவருக்கு உறுதியாகச் சொல்லிக் கொள்கிறேன்.

எதிர்காலத்தில் கர்நாடகத்திலே எப்படி கன்னட மொழி கட்டாயமாக ஆக்கப்பட்டிருக்கிறதோ, அதற்கு என்ன வழிவகைகளை அவர்கள் இன்றைக்குக் கடைப்பிடிக் கிறார்களோ, அதே வழிவகைகளைக் கடைப் பிடித்து தமிழ்நாட்டிலும் தமிழ் மொழியைக் கட்டாயமாக ஆக்குவதற்கு (பலத்த கைதட்டல்) வந்தால், பணியாற்றுவோம். வருவோம், பணியாற்றுவோம். (பலத்த கைதட்டல்)

இந்த இனிய விழாவில் நான் முதலில் குறிப்பிட்டதைப் போல் என்பால் அன்பு கொண்ட, நல்லெண்ணம் கொண்ட கவிஞர் பெருமக்கள், அறிஞர் பெருமக்கள், பேரறிவாளர்கள், பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர்கள், பல்வேறு கட்சிகளைச் சார்ந்தவர்கள், தலைவர்கள், அன்பர்கள் அத்தனை பேரும் இங்கே வழங்கியிருக்கின்ற வாழ்த்துக்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு இந்த விழாவை ஒரு அமைப்பின் சார்பாக, தமிழ் அகாடெமி என்ற அமைப்பின் சார்பாக நடத்த முன்வந்தவர்களுக்கு, அதிலும் குறிப்பாக திருமதி மணிமேகலை கண்ணன் அவர்களுக்கு, நண்பர் கண்ணன் அவர்களுக்கு, மூத்த வழக்கறிஞர் காந்தி அவர்களுக்கு மற்றும் எல்லோருக்கும் என்னுடைய வணக்கத்தையும், வாழ்த்தையும், இதயமார்ந்த நன்றியையும் தெரிவித்துக் கொண்டு இந்த அளவில் வாழ்க தமிழ், வளர்க தமிழ், வளம் பெருக தமிழகம், வலிவு பெறுக நாடு என்று குறிப்பிட்டு விடைபெறுகிறேன்.

(இவ்வாறு சென்னையில் 10.10.2004 அன்று தமிழ்மொழி அகாதமி நடத்திய பாராட்டு விழாவில் தலைவர் கலைஞர் அவர்கள் ஏற்புரை ஆற்றினார்.)



ஓராயிரம்; லட்சம்; ஒரு கோடி நன்றி!

பல்வேறு முற்போக்குச் சட்டங்களும், திட்டங்களும் நிறைவேற்றப் படுமெனச் சுட்டிக்காட்டி நெஞ்சினிக்கப் பல செய்திகளைத் தரும் குடியரசுத் தலைவர் உரையில்; எட்டாவது அட்டவணை மொழிகளை மத்திய ஆட்சி மொழிகளாக்கிட ஆய்வு நடக்குமென்பதுடன்; "தமிழ்; செம்மொழியாக அறிவிக்கப்படும்" என்ற தேன் தோய்த்த பலாச்சுளைச் செய்தியும் கூறப்பட்டுள்ளது. இச்செய்தி கேட்டு இங்குள்ள தமிழர் மட்டுமன்றி கடல் கடந்து வாழ் தமிழர்களும் ஆடிப்பாடி அகமகிழ்ந்து வாழ்த்தொலி முழங்குகின்றனர்.

திராவிட முன்னேற்றக் கழகம் தனது தொடக்கக் காலம் முதல் இந்திய ஆட்சி மொழி பிரச்சினையில் அரசியல் சட்டத்தின் 8வது அட்டவணையில் இருக்கின்ற மொழிகளை மத்திய ஆட்சி மொழிகளாக ஆக்குங்கள் என்பதை வலியுறுத்தி வந்திருக்கின்றது.

1965ஆம் ஆண்டு மாநிலங்களவையில் நமது தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் மத்தியில் தமிழ் ஆட்சி மொழியாக வேண்டு மென்பதை வலியுறுத்திப் பேசியது வருமாறு :–

"மிகத் தொன்மையான மொழியான தமிழை தாய் மொழியாக நான் பெற்றிருக் கிறேன் என்பதை நான் மறந்துவிட முடியாது. எனது முன்னோர்கள் பேசிய அந்த மொழி – எமது கவிஞர்கள் அரும் பெரும் அறிவுரைகளையும், தத்துவங்களையும் யாத்துக் கொடுத்த அந்த மொழி – அள்ள,



அள்ளக் குறையாத அறிவுக் களஞ்சியங்களும், காவியங்களும், இலக்கியங்களும் நிறைந்த அந்த மொழி – அதுதான் எமது தமிழ் மொழி – அம்மொழி இந்தியாவின் ஆட்சி மொழிகளில் ஒன்றாக உரிய இடத்தைப் பெறும்வரை நான் ஒரு போதும் திருப்தியடையமாட்டேன். அநீதி இழைக்கப் படாமல் இருப்பதற்காக என்னுடைய மொழியாகிய தமிழ்மொழியை ஆட்சி மொழி ஆக்குக. அதுவரையில் ஆங்கிலம் தொடர்ந்து நீடிக்கட்டும். உயர்தனிச் செம்மொழியாகிய தமிழ் என் தாய்மொழி என்ற பெருமிதம் எனக்கு இருக்கிறது. அந்தத் தமிழ்மொழி மற்ற எந்த மொழிக்கும் தாழாத வகையில் ஆட்சிமொழி என்ற தகுதி தரப்படும்வரை நான் அமைதி பெற மாட்டேன்.”

இவ்வாறு அண்ணா அவர்கள் முழங்கியதையும், 1996இல் திருச்சி மாநில மாநாட்டில் தம்பி முரசொலி மாறன் முன்மொழிந்து, பொதுச் செயலாளர் பேராசிரியர் வழி மொழிந்த “தமிழையும் இந்திய ஆட்சி மொழிகளில் ஒன்றாக்குக” என்ற தலைப்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தையும் பின்பற்றி, கழக ஆட்சியில் நான் முதல்வராக இருந்தபோது; பிரதமராக இருந்த திரு. வாஜ்பய் அவர்களுக்கு

3–3–2000 அன்று எழுதிய கடிதத்தில்,

“தமிழையும், ஏனைய மொழிகளையும், இந்தி மற்றும் ஆங்கிலத்துடன் ஆட்சி மொழிகளாக ஆக்குவதற்கு ஏற்ற வகையில், அரசியல் சட்டத்தில் மத்திய அரசு இன்னும் திருத்தம் செய்யவில்லை என்ற மனக்குறை தமிழக அரசுக்கும், தமிழ்நாட்டு மக்களுக்கும் உண்டு. தமிழக மக்களின் இந்த



உண்மையான உணர்வுகளை நீங்கள் நிச்சயம் புரிந்து கொள்வீர்கள். எனவே நீண்டகால கோரிக்கையை நிறைவேற்றக் கூடிய வகையில் இந்திய அரசியல் சட்டத்தில் திருத்தம் செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டுகிறேன்" என்று கேட்டுக்கொண்டேன்.

அதற்கு முன்பும் அதற்குப் பின்பும் எழுதப்பட்ட பல கடிதங்களுக்கு சாதகமான பதில் எதுவும் தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசிடமிருந்து நமக்கு கிடைத்தபாடில்லை.

கழகத்தின் இந்த முக்கியமான மொழிக் கோரிக்கையை மத்திய அரசு உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்பது செப்டம்பர் 2003இல் விழுப்புரம் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட அறப்போராட்ட தீர்மானங்களில் ஒன்றாகும். அதே தீர்மானத்தில் தமிழ்மொழியை மத்திய அரசு செம்மொழியாக அறிவிக்கவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டிருக்கிறோம். இந்தக் கோரிக்கையும் பல ஆண்டு காலமாக தமிழ் மக்கள் சார்பாக தி.மு.கழகத்தின் வாயிலாக கூறப்பட்டு வருகின்றது.

ஒரு மொழி, செம்மொழியாக அறிவிக்கப்பட எத்தனை தகுதிப்பாடு தேவை என்பது குறித்தும், அவை அத்தனையும் பொருந்திய மொழி தமிழ் என்பது குறித்தும், மாநாட்டிலேயே நான் தெளிவாக விளக்கி உரையாற்றியிருக்கிறேன்.

உலகத்திலே உள்ள முக்கியமான மொழிகள் என்று எடுத்துக் கொண்டால் சுமார் 600 மொழிகள் இருக்கின்றன.



அதிலே இலக்கிய, இலக்கணம் உடைய மொழிகள் சுமார் 300. இதிலே இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றை உடைய மொழிகள் ஆறு. அவை தமிழ், சீனம், சமஸ்கிருதம், லத்தீன், ஹிப்ரூ, கிரீக். இதிலே லத்தீனும், ஹிப்ரூவும் செத்துப்போன மொழிகள். இஸ்ரேல் அரசாங்கம் ஹிப்ரூவுக்கு உயிரூட்டும் முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறது. கிரீக் மொழி தற்போது புது வாழ்வு பெற்று வருகிறது. சமஸ்கிருதத்துக்கு என்றுமே பேச்சு வழக்கு இருந்ததில்லை, எழுத்து வழக்கு மட்டுமே.

தி.மு.கழக ஆட்சியில் இதுகுறித்து கருத்து அறிவிக்க திருவாளர்கள் அகத்தியலிங்கம், வ.செ.குழந்தைசாமி, பொற்கோ, ஜான் சாமுவேல், மணவை முஸ்தபா ஆகியோரைக் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழுவின் கருத்துரையைப் பெற்று அது மத்திய அரசுக்கும் அனுப்பப்பட்டது. மத்திய அரசு அந்தக் கருத்துரையை மைசூரில் உள்ள இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனத்திற்கு அனுப்பியது. அந்த நடுவண் நிறுவனம் தமிழைச் செவ்வியல் மொழியாக அறிவிக்கலாம் என்ற பரிந்துரையுடன் அந்தக் கருத்துரையை மத்திய அரசுக்கு அனுப்பியது.

1998இல் சென்னைப் பல்கலைக் கழகமும், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகமும், கழக ஆட்சிக் காலத்தில், தமிழ், செவ்வியல் மொழி என்று தீர்மானம் நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தார்கள். இன்னும் சொல்லப்போனால் 1918ஆம் ஆண்டில் சென்னையில் சைவ சித்தாந்த மகா சமாஜம் நடத்திய மாநாட்டிலேயே தமிழைச் செவ்வியல் மொழியாக அறிவிக்க வேண்டுமென்று தீர்மானம்




நிறைவேற்றப் பட்டது. கரந்தை தமிழ்ச் சங்கம், 1919லும், 1920லும் இதேபோன்ற தீர்மானங்களை நிறைவேற்றியது.

கடந்த 2003ஆம் ஆண்டு ஏப்ரல் 8ஆம் நாளன்று தி.மு.க., பா.ம.க., ம.தி.மு.க. ஆகிய கட்சிகளின் மத்திய அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அன்றைய பிரதமர் வாஜ்பய் அவர்களைச் சந்தித்து தமிழைச் செம்மொழியாக அறிவிக்க வேண்டுமென்று கோரி மனு கொடுத்தனர்.

நான் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோதும், எதிர்க்கட்சியிலே இருக்கின்றபோதும் தமிழை செம்மொழி என அறிவிக்க வேண்டுமென்பதற்காக அன்றைய பிரதமர் வாஜ்பய் அவர்களுக்குப் பல கடிதங்கள் எழுதியிருக்கின்றேன்.

தமிழகத்தைச் சேர்ந்த தமிழ்ச் சான்றோர்கள், புலவர் பெருமக்கள் டெல்லியில் 2003ஆம் ஆண்டு ஆகஸ்ட் 18ஆம் நாள் நாடாளுமன்றம் முன்பாக தமிழ் மொழியை செம்மொழியாக அறிவிக்கக் கோரி பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன் அவர்கள் தலைமையில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தியிருக்கிறார்கள். டெல்லி யில் நடந்த அந்த உண்ணா விரதத்தை தமிழகத்தின் அனைத்துக் கட்சிகளும் ஆதரித்துள்ளன. நாடாளுமன்றத்தில் ஆகஸ்ட் திங்களில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் விவாதிக்கப் பட்டபோது பேசிய மத்திய அமைச்சர் தம்பி டி.ஆர். பாலு, இந்தக் கோரிக்கை குறித்து வலியுறுத்திக் கூறியிருக்கிறார்.

தமிழ் செவ்வியல் மொழியாக ஆக்கப்படுவதால் தமிழகத்திற்கு என்னென்ன பயன்கள் ஏற்படும் என்பதையும் விளக்கிட விரும்புகிறேன்.



- மத்திய அரசு தமிழை செம்மொழி என்று அறிவித்தால் உடனடியாக இந்தியப் பல்கலைக் கழக மானியக் குழு அதனை ஏற்கும். அதன்பின் அனைத்து இந்தியப் பல்கலைக் கழகங்களிலும் தமிழ்த் துறை தனித் துறைகளாக உருவாகும். தமிழ் மொழி, தமிழகக் கலை, இலக்கிய ஆய்வுகள் முனைப்பாக நடைபெறும்.

- இந்தியப் பல்கலைக் கழக மானியக் குழு தமிழை செம்மொழியாக ஏற்றால், உலகப் பல்கலைக் கழகங்கள் அனைத்தும் அதை ஏற்கும்.

- தமிழ் மொழிக்கும் தமிழர்க்கும் உலக அளவில் தன்மதிப்பு உயரும்.

- பன்னாட்டு மொழிக் கலைக் களஞ்சியங்களில் – தமிழ் இலக்கியங்கள், கட்டுரைகள், வரலாறு, பண்பாட்டுக் கருத்துகள் இடம் பெறும்.

- பல்கலைக்கழகங்களில் தற்போது தமிழ் மொழி கீழ்த்திசை மொழி என்று கருதப்படுகிறது. இந்நிலை மாறி இந்தியப் பல்கலைக் கழகங்களிலும், உலகப் பல்கலைக் கழகங்களிலும் தமிழ் மொழிக்குத் தனி இருக்கை நிறுவப்பெறும். அத்துறைகள் தனித்தன்மையுடன் செயற்பட வாய்ப்பு ஏற்படும்.

- சமஸ்கிருதத்திற்கு இந்திய அரசு, நேரடியாக 40 கோடி ரூபாயும், அரசு சார்பு நிறுவனங்கள் வாயிலாக 100 கோடி



ரூபாயும் ஒதுக்கி, அந்த மொழியின் வளர்ச்சிக்கு உதவி வருவது போல் தமிழ்மொழி வளர்ச்சிக்கும் உதவி கிடைக்க வாய்ப்பு ஏற்படும்.

- தமிழ்நாட்டிலும், இந்தியநாட்டிலும் பரந்து விரிந்து கிடக்கும் கல்வெட்டாய்வு, ஓலைச்சுவடி ஆய்வுகள் சமஸ்கிருதத்தை மையப்படுத்தியே ஆராயப்படுகின்றன. இந்த நிலையில் தமிழ்மொழியை மையப்படுத்தி உண்மையான வரலாற்று பண்பாட்டுக் கருத்துகள் வெளிவர முடியும்.


- அறிவியல் தமிழ் வளர்ச்சிக்கு வேகமூட்டும் வகையில் மேலும் பல திட்டங்கள் வகுத்துச் செயல்பட வாய்ப்பு ஏற்படும்.

- இந்திய மொழிகளில் மட்டும் அல்லாது ஆங்கிலம், பிரெஞ்சு போன்ற மொழிகளில் தமிழ் இலக்கியங்களும், நவீன படைப்புகளும் மொழிபெயர்க்கப்பட்டு உலகெங்கும் பரவும்.

எனவே, தமிழுக்கும் தமிழர்க்கும் எழுச்சி மிகுந்த – ஏற்றம் நிறைந்த – எதிர்காலம் அமைவதற்கு இன்றைய ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் சார்பில் குடியரசுத் தலைவர் உரையில் கொடி உயர்த்தப்பட்டிருப்பதற்கு உடன்பிறப்பே; உன் சார்பிலும், உலகத்தமிழர் சார்பிலும் நன்றி! நன்றி! ஓராயிரம்; லட்சம்; ஒரு கோடி நன்றி!

'முரசொலி'
8.6.2004.

அன்புள்ள,
மு.க.



கலைஞர் கருவூலம்

KALAIGNAR KARUVOOLAM

கலைஞர்
கருவூலம்

திராவிட இயக்க வரலாறு

HISTORY OF DRAVIDIAN MOVEMENT